காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வை, இலத்தூர் தெற்கு ஒன்றிய தொண்டர் அணி அமைப்பாளராக கோ. கோபிநாத், துணை அமைப்பாளர்களாக கு.கோதண்டராமன், சு.வெங்கடேசன், டெய்லர் செ. ராஜி, ம. சுதாகர், ச.பிரவீன் ஆகியோர் நியமிக்கப்பட்டதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் ஒன்றியச் செயலாளர் எம்.எஸ்.பாபு உள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ஜே.என்.சாலை, சந்தானம் அவன்யூவில் இந்து சமய அறநிலையத் துறையின் புதிய திருவள்ளூர் மண்டல இணை ஆணையர் தற்காலிக அலுவலகத்தை பயன்பாட்டிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் ஆ.கிருஷ்ணசாமி டி.ஜே.கோவிந்தராஜன், துரைசந்திரசேகர், நகர் மன்ற தலைவர் உதமலர் பாண்டியன், நகர துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், இணை ஆணையர்கள் அனிதா, ரமணி, அருணாசலம், சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் உதவி ஆணையர், சிவஞானம், திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் மாதவன், து.ரு.பிரகாஷ், லதா, சரவணன், பாலாஜி, ராகவன், முத்துதமிழ், சங்கரன், துறை சார்ந்த அலுவலர்கள் பணியார்கள் உள்ளனர்.

தமிழ்நாடு அரசு கைத்தறித்துறை சார்பில்

“தேசிய கைத்தறி கண்காட்சி - 2025” துவக்கம்!

அமைச்சர் ஆர்.காந்தி தொடங்கி வைத்தார்! அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு பங்கேற்றனர்!

சென்னை, அக்.4-

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கைத்தறி துணி வகைகளின் விற்பனையை அதிகரிப்பதற்கு ஏதுவாக கைத்தறி துறையால் “தேசிய கைத்தறி கண்காட்சி 2025” சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று (03.10.2025) காலை 10.00 மணியளவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இக்கண்காட்சி 17.10.2025 வரை நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் கைத்தறி தொழில், நாட்டின் கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் பாரம்பரியத்தின் ஒரு அங்கமாக உள்ளது. இத்தொழில் குறிப்பாக கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. இத்தொழில் பழமையான பாரம்பரியங்களைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், உலகளவில் அதன் தரம் மற்றும் கைவினைத் திறனுக்காக அங்கீகரிக்கப்பட்ட மிகுந்த அழகான கைத்தறி பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் புதுமையான கொள்கைகள் மூலம் இத்துறையை மேம்படுத்துவதில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது.

இதன் ஓர் அங்கமாக கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் துணி இரகங்களின் அழகியல் வடிவமைப்புகள் மற்றும் அதன் வண்ணங்கள் பொதுமக்களை கவரும் வண்ணம் உள்ளதை அனைவரும் பார்வையிடவும் தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு கைத்தறி துணி இரகங்களின் கண்கவரும் கண்காட்சியினை, ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் கைத்தறி துறையால் “தேசிய கைத்தறி கண்காட்சி-2025” சென்னை கலைவாணர் அரங்கில் 03.10.2025 முதல் 17.10.2025 முடிய 15 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

மேலும், இக்கண்காட்சியில் கைத்தறி நெசவாளர்களின் கைவண்ணங்களால் தனித்துவத்துடன் நெசவு செய்யப்பட்ட பேஸ்டல் கலெக்ஷன்ஸ், பூம்பட்டு, புதுமணப்பட்டு/ மாங்கல்யா கலெக்ஷன்ஸ் , பட்டு நூல் டிசைனர் சேலைகள், கட்டம் பட்டு, வெண்ணிலா கலெக்ஷன்ஸ், அனுதினப்பட்டு, பருத்தி நூல் யோகா மேட், தர்ப்பை புல் யோகா மேட், தாய்சேய் பெட்டகம் போன்ற புதிய வடிவமைப்பு இரகங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன்அறிமுகம் செய்து வைத்தார்.

இவ்விழாவின் முதல் விற்பனையினை இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு துவக்கி வைத்தார்.

இக்கண்காட்சியில் கைத்தறி துறையின் கீழ் இயங்கி வரும் 300-க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், வெளிமாநில தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடன் மத்திய / மாநில சிறப்பு முகமை நிறுவனங்களும் பங்கு பெற்றுள்ளன.

இக்கண்காட்சியில் உலகப் பிரசித்தி பெற்ற காஞ்சிபுரம் பட்டு, திருபுவனம் பட்டு, ஆரணி பட்டு சேலைகள், சேலம் வெண்பட்டு வேட்டிகள், அருப்புக்கோட்டை, நெகமம், செட்டிநாடு, கோரா காட்டன், செடிபுட்டா, மதுரை சுங்குடி, கூரைநாடு, காஞ்சி காட்டன், பரமக்குடி புதினம் மற்றும் ஆர்கானிக்,டை-டை சேலைகள், மென்பட்டு சேலைகள், சென்னிமலை பெட்சீட், கரூர் பெட்சீட் மற்றும் ஏற்றுமதி இரகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இத்துடன் வெளிமாநிலங்களின் பிரசித்தி பெற்ற பனாராஸ், டசர், பைத்தானி, போச்சம்பள்ளி, மைசூர் பட்டு சேலைகளும், பெங்கால் காட்டன், வெங்கடகிரி காட்டன், ஒடிசா இக்கட், சந்தேரி, தந்துஜா, மிருக்னாயினி சேலைகளும், ஜம்மு காஷ்மீர் சால்வைகளும் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கூடுதலாக பும்புகார் நிறுவனத்தின் அழகிய வேலைப்பாடு கொண்ட கலைநயமிக்க கைவினைப் பொருட்களும், தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் இயற்கை சார்ந்த பொருட்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சி 03.10.2025 முதல் 17.10.2025 முடிய தினமும் காலை 10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெறும். இக்கண்காட்சியில் விற்பனை செய்யப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கைத்தறி இரகங்களுக்கு 30 விழுக்காடு முதல் 50 விழுக்காடு வரை சிறப்புக் கழிவு வழங்கப்படும்.

இக்கண்காட்சியின் துவக்கவிழாவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் எம். மகேஷ்குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு செயலாளர் திருமதி வே. அமுதவல்லி, கைத்தறி துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார்,

கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி கவிதா ராமு மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்சியில் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் கைத்தறி உபகரணங்கள், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 21 பயனாளிகளுக்கு ரூபாய் 2 இலட்சம் மதிப்பில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த பிரமாண்டமான கண்காட்சியின் மூலம், தமிழ்நாட்டின் கைத்தறி பாரம்பரியத்தின் சிறப்பு, அதன் தனித்துவமான கலை நுணுக்கம் மற்றும் கலாச்சார வேலைப்பாடுகளை நேரில் கண்டு கைத்தறி இரகங்களை வாங்க பொதுமக்கள் திரளாக வருகை தருமாறு, தமிழ்நாடு அரசின் சார்பில் கைத்தறித் துறை அன்புடன் அழைக்கிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 226 வது நாள்!

வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, அக்.4-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 226 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (03.10.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 95, தாந்தோணி அம்மன் கோயில் தெரு, வில்லிவாக்கம். 2) வட்டம் 95அ, பாரதி நகர் 2வது தெரு, வில்லிவாக்கம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி.டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமா சங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, K.S.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ. துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சி சார்பில் இந்தியாவிலேயே முதன்முறையாக செல்லப் பிராணிகள் – தெருநாய்களுக்கு

மைக்ரோசிப் செலுத்துதல், உரிமம் வழங்குதல் இணையதளம்!

மேயர் திருமதி ஆர். பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை.அக்.4-

பெருநகர சென்னை மாநகராட்சியில் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்திடும் வகையில் அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சையினையும் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி போடும் நடவடிக்கைகளும், செல்லப் பிராணிகளுக்கான உரிமம் வழங்குதல் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்துதல் உள்ளிட்ட விவரங்களை தொடர்ந்து கண்காணித்தல் நடவடிக்கைகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொள்ளும் வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியில் மைக்ரோசிப் செலுத்துதல், உரிமம் வழங்குதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த மேலாண்மைக்காக மேம்படுத்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதள சேவையினை மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் நேற்று (03.10.2025) ரிப்பன் கட்டட கூட்ட ரங்கில் நடைபெற்ற நிகழ்வில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மேயர் அவர்கள் தெரிவித்ததாவது:-

செல்லப் பிராணிகள் வளர்ப்பினை முறைப்படுத்தி கண்காணிப்பதற்காக இந்தியாவிலேயே முதன்முறையாக மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை :

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, விதிகள் 2023, பிரிவு 292ன் படி பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் செல்லப்பிராணிகள் வளர்ப்பதற்கான உரிமம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் செல்லப்பிராணிகள் வளர்ப்பினை முறைப்படுத்த கடந்த 2023 ஆகஸ்ட் மாதம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக செல்லப்பிராணி உரிமம் பெறும் முறை நடைமுறையில் உள்ளது.

செல்லப்பிராணிகளின் உரிமையாளர் தங்களின் புகைப்படம், முகவரிச் சான்று, செல்லப்பிராணி புகைப்படம் மற்றும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தப்பட்ட சான்றிதழ் ஆகியவற்றை பதிவேற்றம் செய்து ரூ.50/-ஐ உரிமக் கட்டணமாக செலுத்தி உரிமம் பெற்று வருகின்றனர். கடந்த 2024 ஆம் ஆண்டு முதல் 2025 - செப்டம்பர் மாதம் வரை 12,393 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் செல்லப்பிராணிக்களுக்கான உரிமம் பெறும் நடைமுறையை மேலும் விரைவுபடுத்தவும், இதன்மூலம் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் எளிதாக தங்கள் செல்லப்பிராணிகளுக்கான உரிமத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் இந்தியாவிலேயே முதன்முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியில் மைக்ரோசிப் செலுத்துதல், உரிமம் வழங்குதல் உள்ளிட்ட மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை (www.chennaicorporation.gov.in-ல் Pet Animal Licence) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

செல்லப்பிராணி உரிமம் பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் உரிமையாளர்களின் பொறுப்புகள்:

கட்டுப்படுத்தப்பட்ட இனப்பெருக்கம், தடுப்பூசி, கருத்தடை மற்றும் உரிமம் ஆகியவற்றிற்கு செல்லப்பிராணியின் உரிமையாளர் பொறுப்பு ஏற்க வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள எந்தவொரு சாலை/தெரு/சாக்கடையிலும் தனது நாய்/செல்லப்பிராணியை கழிவு ஏற்படுத்த எந்த உரிமையாளரோ அல்லது நாயின் பொறுப்பாளரோ அனுமதிக்கக் கூடாது. ஏதேனும் நாய் சாலை/தெரு/சாக்கடையில் கழிவு ஏற்படுத்துவதை சுத்தம் செய்து முறையாக அப்புறப்படுத்துவது சம்பந்தப்பட்ட உரிமையாளரின் கடமையாகும்.

தங்கள் செல்லப்பிராணிகளை மற்றவர்களுக்கு தொந்தரவு அல்லது பொது சுகாதார ஆபத்தை ஏற்படுத்தாமல் வைத்திருக்க வேண்டும்.

செல்லப் பிராணிகளை பொது இடங்களுக்கு அழைத்துச் செல்லும் போது நாய்களை வீடுகள், தெருக்கள், பூங்காக்கள் மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில் அழைத்துச் செல்லும் போது கழுத்துப் பட்டையுடன் சங்கிலி இல்லாமல் கொண்டு செல்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். பொது இடங்களில் முகமூடி இல்லாமல் திரிய விடுதல் அல்லது அழைத்துச் செல்வதை தவிர்க்க வேண்டும்.

செல்லப் பிராணிகள் வளர்ப்போர் இந்த நிபந்தனைகளை தவறாது பின்பற்ற வேண்டும். இதனை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கைவிடப்படும் செல்லப்பிராணிகளை கண்காணித்தல்:

சமீபகாலமாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கைவிடப்படும் (Abandoning) வளர்ப்பு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக பல புகார்கள் பெறப்பட்டு வருகின்றன.

ஆகவே, செல்லப்பிராணிகளுக்கு ஆண்டுதோறும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தவும். இந்த தடுப்பூசி போட்ட நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு மட்டும் செல்லப்பிராணிகளுக்கு உரிமம் வழங்கப்படுவதை உறுதி செய்யவும், செல்லப்பிராணிகள் கைவிடப்படுவதை (Pet Abandonment) தடுக்கவும், அனைத்து செல்லப்பிராணிகளுக்கும் மைக்ரோ சிப்பிங் செலுத்துவதும் பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த மைக்ரோ சிப்பில் செல்லப்பிராணிகளின் உரிமையாளரின் பெயர், முகவரி உள்ளிட்ட தரவுகள் பதிவு செய்யப்படும்.

செல்லப்பிராணிகளுக்கு மைக்ரோ சிப்பிங் பொருத்தும் பணி மற்றும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தும் பணி 08.10.2025 முதல் தொடங்குதல்

மேற்கண்ட மைக்ரோ சிப்பிங் பொருத்தும் பணி மற்றும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்துவது பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுபாட்டில் இயங்கும் கீழ்காணும் 6 செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்களில் 08.10.2025 அன்று முதல் இலவசமாக செயல்படுத்தப்படவுள்ளது.

1. திரு.வி.க. நகர் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-6

2. புளியந்தோப்பு செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-6

3. லாயிட்ஸ் காலனி செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-9

4. நுங்கம்பாக்கம் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-9

5. கண்ணம்மாப்பேட்டை செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-10

6. மீனம்பாக்கம் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-12

பதிவேற்றப்பட்ட விவரங்கள் மற்றும் மைக்ரோசிப் பதிவு எண்கள் மண்டல கால்நடை உதவி மருத்துவர்கள் மூலம் சரிபார்க்கப்பட்டு, செல்லப்பிராணிகளுக்கான உரிமம் வழங்கப்படவுள்ளது. இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கால்நடை மருத்துவர்கள் மற்றும் தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் கால்நடை மருத்துவர்கள் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்துதல் மற்றும் மைக்ரோசிப் பொருத்துதல் ஆகியவைற்றை உறுதிசெய்த பின்னரே மாநகராட்சியால் செல்லப் பிராணிகளுக்கான உரிமம் வழங்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பணியாளர்களால் வீடுவீடாகச் சென்று உரிமையார்கள் வளர்க்கும் செல்லப் பிராணிகள் குறித்த கணக்கெடுப்பும், உரிமம் வழங்குவதற்கான உரிய வழிகாட்டுதல்கள் குறித்த அறிவுறுத்தலும் வழங்கும் பணி

வருகின்ற நவம்பர் மாதம் முதல் வீடுவீடாகச் சென்று மாநகராட்சிப் பணியாளர்கள் மூலம் செல்லப்பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதா என்றும், உரிமம் பெறப்பட்டுள்ளதா என்றும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, செல்லப்பிராணி வளர்ப்போரிடம் செல்லப்பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடுவதற்கும், அந்த நாள் முதல் உரிமம் பெறுவதற்கும், மைக்ரோ சிப் பொருத்துவதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்படும்.

தெருநாய்களின் இனக்கட்டுபாட்டு சட்டம் மற்றும் விதிகள் :

தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம், 1960ன் பிரிவு 38ன் கீழ் நாய் இனக்கட்டுபாட்டு விதிகள்-2023க்குட்பட்டு தெருநாய்கள் பிடிக்கப்பட்டு அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்த பிறகு நாய் இனக் கட்டுப்பாட்டு மையங்களில் பராமரித்து, வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் அவை பிடிக்கப்பட்ட இடத்திலேயே மீண்டும் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

தெருநாய்களின் இனக்கட்டுபாட்டு திட்டத்தை முறைப்படுத்துதல்:

தற்போது நாய்களைப் பிடிக்கும் பணியை மேற்கொள்ள 23 நாய் பிடிக்கும் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. ஒவ்வொரு வாகனத்திற்கும் 5 நாய் பிடிக்கும் பணியாளர்கள் மற்றும் ஒரு ஓட்டுநர் நியமிக்கப்பட்டுள்ளனர். நாய் பிடிப்பவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட்டு, நாய்களைப் பிடித்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. நாய்களைப் பிடிப்பதற்காக வலைகள் வழங்கப்பட்டு, அதனைக் கொண்டு நாய்கள் பிடிக்கப்படுகின்றன.

நாய்களை முறையாகப் பிடித்து விடுவிப்பதை உறுதி செய்வதற்காக, QR குறியீடு காலர்கள் மற்றும் மைக்ரோ சிப் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது வரை

12,250 தெருநாய்களுக்கு QR குறியீடு காலர்கள் மற்றும் மைக்ரோ சிப் பொருத்தப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு முதல் 2025 (செப்டம்பர் வரை) 72,345 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாம் நடவடிக்கைகள்

மேயர் அவர்களின் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் அக புற ஒட்டுண்ணி நீக்கும் ஊசி செலுத்தும் திட்டம் மேயர் அவர்களால் கடந்த 09.08.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு இதுவரை 67,297 தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் அக புற ஒட்டுண்ணி நீக்கும் ஊசி மருந்து செலுத்தப்பட்டுள்ளது. மண்டலங்கள் 2,3,4,5,6,12,13&14 ஆகிய 8 மண்டலங்களில் இத்திட்டம் நிறைவடைந்துள்ளது. இதர 7 மண்டலங்களில், தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி தடுப்பூசி போடும் பணி மற்றும் அக புற ஒட்டுண்ணி நீக்கும் ஊசி மருந்து செலுத்தும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு நவம்பர் மாதத்தில் இப்பணிகள் நிறைவு பெறும்.

புகார் தெரிவித்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் நாய்கள் தொடர்பாக புகார் தெரிவிக்க மாநகராட்சியின் கட்டுப்பாட்டு அறைக்கு 1913 என்கிற எண்ணிலும், மக்கள் சேவைக்கான வாட்ஸ்அப் 9445061913 என்கிற எண்ணிலும் புகாரினைத் தெரிவிக்கலாம். செல்லப்பிராணிகள் மற்றும் தெருநாய்களின் ஒருங்கிணைக்கப்பட்ட மேலாண்மைக்காக இந்தியாவிலேயே முதன்முறையாக மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை

செல்லப்பிராணிகள் மற்றும் தெருநாய்களின் ஒருங்கிணைக்கப்பட்ட மேலாண்மைக்காக இந்தியாவிலேயே முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட இணையதள சேவையை (www.chennaicorporation.gov.in-ல் Pet Licence) செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் மற்றும் பொுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று மேயர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர் ஜே. கமால் உசேன் மற்றும் கால்நடை மருத்துவர்கள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி குருவராஜகண்டிகை அரசு உயர்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் மூலம் ரூபாய் 2 கோடியே 16 லட்சம் மதிப்பில் 5 வகுப்பறை கட்டிடம் அடிக்கல் நாட்டு விழாவில் முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழுத் உறுப்பினரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் பங்கேற்று அடிக்கல் நாட்டினார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ். இரா.அறிவழகன், மு.கேசவன், டி.மஸ்தான், ஏ.யுகேந்தர், எஸ்.உதயகுமார். பாலசுப்பிரமணியராஜா ரவிக்குமார், கே.வி.நாகராஜ் ப.பரத்குமார். எம்.மஸ்தான் ரெட்டம்பேடு செந்தில் எஸ்.முத்து, ஏ.கே.முரளி எஸ்.வெங்கடேசன் பா.ஆனந்தராஜ். எல் அர்.மணி, தலைமை விராஸ்வரய்யா, வழக்கறிஞர் சுரேஷ்பாபு ஜெ.மணி, எஸ்.செல்வராஜ் ஆசிரியர் ஜெயபாரதி, பொதுப்பணித்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.